சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 27.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **100/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-22 |
| சாட்சியின் பெயர் | : | ரமேஷ் |
| தந்தை பெயர் | : | பாலு |
| கிராமம் | : | திருவாளங்காடு |
| தாலுக்கா | : | குத்தாலம் |
| தொழில் | : | காவல் ஆய்வாளர் வலங்கைமான் |
| வயது | : | 53 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4, 6, 7, 10 எதிரிகள் ஆஜர். 5, 8, 9 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் வட்டம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து

வருகிறேன். கடந்த 14.01.2021 ம் தேதியன்று 21.00 மணிக்கு திருவாரூர் நகர காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது கூடுதல் பொறுப்பாக திருவாரூர் தாலுக்கா காவல் ஆய்வாளராகவும் பணிபுரிந்தேன். மேற்படி தேதியில் திருவாரூர் மாவட்டம், அகரதிருநல்லூரை சேர்ந்த செல்வமணி என்பவரின் மகன் அ.சா.1 ஜான்சன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் நிலையம் ஆஜரில் இருந்த உதவி ஆய்வாளர் காமாட்சி என்பவர் நிலைய குற்ற எண் 873/2021 ச/பி- 341, 324, 302, 506 (2) of IPC ன்படி வழக்கை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே தேதியில் 21.15 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான தஞ்சாவூரிலிருந்து திருவாரூர் செல்லும் நெடுஞ்சாலையில் கிடாரங்கொண்டான் சுப்பிரமணியன் என்பவரின் வீட்டு முன்பாக சாட்சிகள் குத்புதீன், நவாஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.15 மற்றும் அ.சா.ஆ.16 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் வழக்கின் சொத்தான இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன குமரேசன் என்பவர் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனம் TN 50 AC 4192 என்ற Hero Splender என்ற இரு சக்கர வாகனத்தையும், Lunors Chappel என பெயரிட்ட ஒரு ஜோடி செருப்புகளையும், Vivo செல்போன் ஒன்றையும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த இரு சக்கர வாகனம் TN 50 AC 4192 என்ற Hero Splender என்ற இரு சக்கர வாகனம் **சா.பொ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Lunors Chappel என பெயரிட்ட ஒரு ஜோடி செருப்புகள் **சா.பொ.7**, Vivo செல்போன் ஒன்று **சா.பொ.8** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தடய பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும், சம்பவ இடத்திலிருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் 23.00 மணிக்கு இரத்தம் தோய்ந்த மண் சிறிதளவும், சாதாரண மண் சிறிதளவும் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த இரத்தம் தோய்ந்த மண் சிறிதளவு **சா.பொ.5** ஆன, சாதாரண மண் சிறிதளவு **சா.பொ.6** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்து. மேற்படி தடய பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கின் வாதி மற்றும் புகார்தாரரான அ.சா.1 ஜான்சன், சுபேஷ், மற்றும் இறந்துபோனவருடன் இரு சக்கர வாகனத்தில் உடன் சென்ற சுசீலா மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான குத்புதீன், நவாஸ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

15.11.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சவக்கிடங்கு முன்பாக இவ்வழக்கில் இறந்துபோன குமரேசன் என்பவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் வீரக்குமார், பாரதிதாசன், தேவேந்திரன், சுப்பையன், மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் பஞ்சாயத்தார் சாட்சிகளான செளரிராஜன், செல்வமணி, மணிகண்டன், மூர்த்தி, மற்றொரு செல்வமணி ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பிரேத விசாரணை சாட்சிகளான செளரிராஜன், செல்வமணி, மணிகண்டன், மூர்த்தி, மற்றொரு செல்வமணி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் கொலையுண்டு இறந்துபோன குமரேசன் என்பவருக்கும், 2019 ம் ஆண்டு கருப்பு (எ) முத்துக்கிருஷ்ணன் என்பவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு முத்துக்கிருஷ்ணன் என்பவர் கொலை செய்யப்பட்டு இறந்து போன வழக்கில் குமரேசன் என்பவர் ஈடுபட்டுள்ளார் என்பதால் இவரை கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் சூலை (எ) முத்துக்குமார், சதீஷ் (எ) அம்மாபேட்டை சதீஷ், திட்டம் தீட்டி வந்ததாக மேற்படி பஞ்சாயத்தார்கள் மற்றும் பஞ்சாயத்தார் சாட்சிகள் தங்களது வாக்குமூலங்களில் கூறினார்கள். மேற்படி கொலையுண்டு இறந்து போன குமரேசன் இந்து ஆதிதிராவிட பறையன் வகுப்பை சேர்ந்தவர் என்பதாலும், மேற்படி வழக்கில் எதிரிகளாக கூறப்பட்டுள்ள

முத்துக்குமார், சதீஷ் ஆகிய இருவரும் இந்து பிற்பட்டோர் கள்ளர் பிரிவை சேர்ந்தவர்கள் என்பதாலும், மேலும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் உள்ள வீட்டின் உரிமையாளரான சுப்பிரமணியன் என்பவரையும், அதன் அருகில் கடை வைத்திருக்கும் ஞானவேல் என்பவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பெற்ற வகையில், மேற்படி நபர்களால் கொலை செய்யப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கின் பிரிவினை ச/பி- 341, 324, 302, 506 (2) of IPC r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) SC/ST (PoA) Act ன் கீழ் பிரிவு மாற்றம் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் இறந்துபோனவரின் உடலை பிணக்கூராய்வு செய்வதற்குரிய ஆவணங்களுடன் திருவாரூர் தாலுக்கா சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி என்பவரை மேற்படி பணிக்கு அமர்த்தி பிணக்கூராய்வு முடிந்து, அவர் அளித்த தனி அறிக்கை மற்றும் இறந்து போனவர் அணிந்திருந்த ரோஸ் கலர் முழுக்கை சட்டை ஒன்றும், வெளிர் நீல நிறமுடைய ஜீன்ஸ் பேண்ட் ஒன்றும், கருப்பு கலர் ஸ்போர்ட்ஸ் ட்ராயர் ஒன்றும், க்ரே மற்றும் இரத்தக்கறையுடன் கூடிய நீலக்கலர் கலந்த முண்டா பனியன் ஒன்றும், கொடுத்தார். அந்த ரோஸ் கலர் முழுக்கை சட்டை ஒன்று **சா.பொ.1**, வெளிர் நீல நிறமுடைய ஜீன்ஸ் பேண்ட் ஒன்று **சா.பொ.2**, கருப்பு கலர் ஸ்போர்ட்ஸ் ட்ராயர் ஒன்று **சா.பொ.3**, க்ரே மற்றும் இரத்தக்கறையுடன் கூடிய நீலக்கலர் கலந்த முண்டா பனியன் ஒன்று **சா.பொ.4** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலான பொருட்களையும், படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி வழக்கு என் விசாரணைக்கு உட்படாததல் இவ்வழக்கின் சட்டப்பிரிவு மாற்று அறிக்கையுடன் காவல் கண்காணிப்பாளர் திருவாரூர் அவர்களுக்கு சமர்ப்பித்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 யிடம்நான் எந்தவிதமான புகாரும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில்சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன இடத்தில்

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எந்தவிதமான தடய பொருட்களை கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எந்தவிதமான சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.27 18:06:19 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.